**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**03 ஜூலை 2015 / 16 ரமதான் 1436**

# குடும்பத்தாரிடம் உபகாரச் சிந்தனையை (இஹ்சான்) ஏற்படுத்துதல்

الْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللّهُ وَحْدَهُ لاَ
شَرِيْكَ لَهُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً
عَبْدُهُ وَرَسُوْلُهُ الْمَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللّهُمَّ صَلِّ
عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْماً كَثِيْراً.
أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللّهِ اتَّقُوْا اللّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

"பரக்கத்கள்" எனும் அபிவிருத்திகள், வளங்கள் மிக்க இவ்வெள்ளிக்கிழமை தினத்தில், அல்லாஹ்வின் மீது, தொடர்ந்து உண்மையான "தக்வா" வுடன் இருப்போம் எனத் தீர்மானம் எடுத்துக் கொள்வதன் மூலம் அல்லாஹ்வுடனான நமது உறவைப் பலப்படுத்திக் கொள்வோமாக!

ஜமாஅத்தார்களே!

ஆன்மீகம் சம்பந்தமான முன்னேற்றம் என்பது, இறைநம்பிக்கை யாளருடைய வாழ்க்கையின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். ஒருபுறம், "ஈமான்" எனும் இறைநம்பிக்கையைப் பலப்படுத்துவதன் மூலமாகவும், மறுபுறம், தனது வாழ்வில் "இஹ்சான்" எனப்படும் கருணைச் சிந்தனையை வளர்த்துக் கொள்வதன் மூலமாகவும் ஒருவர் தன்னிடம் ஆன்மீக முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும். எனினும், "இஹ்சான்" என்பதன் பொருள் என்ன? என்பதை நாம் அறிந்து கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

இலக்கிய ரீதியில், "இஹ்சான்" என்றால் நற்காரியங்களைச் செய்வது என்பது பொருள் ஆகும். "ஒருவர் தனது வேலையை அவரால் முடிந்த அளவு சிறப்பாகச் செய்வதற்கு அவரைத் தூண்டக்கூடிய சிந்தனை" என்று கூட "இஹ்சான்" என்பதற்கு விளக்கமளிக்கலாம். "இஹ்சான்" உடைய சிந்தனையில் இருவித நோக்கங்கள் காணப்படுகின்றன:

**அவற்றில் ஒன்று**, "இபாதத்" எனப்படும் இறை வணக்கத்தை இஹ்சானுடன் நிறைவேற்றுவதாகும். **இரண்டாவது**, மற்ற மக்களுடன் கொடுக்கல் வாங்கல் (முஆமலாத்) செய்து கொள்ளும் போது இஹ்சானுடன் நடந்து கொள்வதாகும். மலக்குமார்களின் தலைவர் ஜிப்ரயீல் (அலை) அவர்கள், இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களிடம்: இஹ்சான் என்றால் என்ன எனக் கேட்ட போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பின்வருமாறு பதில் கூறினார்கள்:

أَنْ تَعْبُدَ اللهَ كَأَنَّكَ تَرَاهُ فَإِنْ لَمْ تَكُنْ تَرَاهُ فَإِنَّهُ يَرَاكَ

பொருள்: அல்லாஹ்வை நீ பார்ப்பதைப் போல் நினைத்து அவனை நீ வணங்க வேண்டும். நீ அல்லாஹ்வைப் பார்க்காவிட்டாலும் அவன் உன்னைப் பார்க்கின்றான் என்ற சிந்தனையில் அல்லாஹ்வை நீ வணங்க வேண்டும். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதில் "இஹ்சான்" என்றால், ஒரு இறைநம்பிக்கையாளர் முழு மனதுடனும் (குஷூஃ), பணிவுடனும் (தவாதுஃ) வணக்க வழிபாட்டுச் செயல்களை நிறைவேற்றுவதாகும். அல்லாஹ்வை நேரில் சந்திப்பதைப் போன்றும், அவனை முன்னோக்குவதைப் போன்றும் உளத்தூய்மையுடன் வணங்கி வழிபட வேண்டும். இவ்விதமான உணர்வுகள் காணப்படுமானால் நிச்சயம் அந்த இறைநம்பிக்கையாளர் அல்லாஹ்வின் எந்த சட்டத்தையும் மீறுவதற்குப் பயப்படுவார்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

வணங்கி வழிபடும் விஷயத்தில் அல்லாஹ்வுடனான நமது உறவை சிறப்பாக அமைத்துக் கொள்வதுடன், மற்ற ஜனங்களுடனான நமது செயல்பாடுகளின் விஷயத்திலும் நமது உறவை நன்றாக அமைத்துக் கொள்வது அவசியம் என்பதும் "இஹ்சான்" என்பதன் விரிவான பொருளில் அடங்கும். உலகம் சம்பந்தமான விஷயங்களாக இருப்பினும், சன்மார்க்கம் சம்பந்தமான விஷயங்களாக இருப்பினும் அனைத்திலும் மற்றவர் களுடனான நமது உறவைச் சிறப்பாக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு முஸ்லிமும் தொழுகை, நோன்பு போன்ற விஷயங்களில் மட்டும் இஹ்சானுடன் இருக்க வேண்டுமென்பதல்ல, குடும்பம், சமுதாயம் மற்றும்

பரம்பரைப் பழக்க வழக்கங்கள் போன்ற மற்றவர்களுடான தனது உறவுகள் விஷயத்திலும் இஹ்சானுடன் நடந்து கொள்வது கடமையாகும். ஒவ்வொரு இறைநம்பிக்கையாளரும் இஹ்சானுடன் நடந்து கொள்ள வேண்டுமென அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கட்டளையிடுகின்றான். திருக்குர்ஆனின் ”அல்-கஸஸ்” எனும் அத்தியாயத்தின் 77-வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

وَابْتَغِ فِيمَا آتَاكَ اللَّهُ الدَّارَ الْآخِرَةَ ۖ وَلَا تَنسَ نَصِيبَكَ
مِنَ الدُّنْيَا ۖ وَأَحْسِن كَمَا أَحْسَنَ اللَّهُ إِلَيْكَ ۖ وَلَا تَبْغِ الْفَسَادَ فِي
الْأَرْضِ ۖ إِنَّ اللَّهَ لَا يُحِبُّ الْمُفْسِدِينَ ﴿٧٧﴾

பொருள்: இன்னும், அல்லாஹ் உனக்குக் கொடுத்ததில் நீ மறுமையின் வீட்டைத் தேடிக்கொள். உலகத்திலுள்ள உன் பங்கை மறந்து விடாதே! அல்லாஹ் உனக்கு உபகாரம் செய்தது போன்று நீயும் (மற்றவர்களுக்கு) உபகாரம் செய்; பூமியில் குழப்பத்தை ஏற்படுத்தாதே- நிச்சயமாக அல்லாஹ் குழப்பவாதிகளை நேசிக்கமாட்டான்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

ரமதான் மாதத்தைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்ற உணர்வுடன், நம்மில் ”இஹ்சான்” எனும் உயிரோட்டத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும், அதனை முன்னேற்றிக் கொள்வதற்கும் இம்மாதத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வோம் என நான் நம்புகிறேன். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கான வணக்க வழிபாட்டுச்

செயல்களை நிறைவேற்றுதல், நமது சமுதாயம் முதற்கொண்டு அனைவருக்கும் ”இஹ்சான்” செய்தல் போன்ற அனைத்து சீரிய சிந்தனைகளும் இம்மாதத்தில் நம்மிடம் காணப்பட வேண்டும்.

வணக்க வழிபாட்டுச் செயல்களை நிறைவேற்றுவதில் அதிக அக்கறையையும் அன்பையும் நமது பிள்ளைகளிடம் ஏற்படுத்துவதற்கு, குறிப்பாக, தொழுகைகளை நிறைவேற்றுவதில் அவர்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு ரமதான் மாதத்தின் மீதமுள்ள நாட்களை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அனைவரையும் படைத்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுடனான நமது உறவின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு நாம் எடுத்துரைக்க வேண்டும். ஒருவர், அல்லாஹ்வுக்கும் தனக்கும் மத்தியிலான உறவை சரியாக அறியும் போது தான், தன்னில் அவர் ஆன்மீகத்தையும், தனது உள்ளத்தில் இஹ்சானையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும். குறிப்பாக, ரமதான் மாதத்தின் பிந்திய பத்து நாட்கள் நம்மை நெருங்கி வருவதை முன்னிட்டு, அதனை அரிய வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, இப்புனிதமிக்க மாதத்தின் கடைசி பத்து இரவுகளில் வணக்க வழிபாடுகளை அதிகமாகச் செய்வதன் மூலம் ”லைலத்துல் கத்ர்” எனப்படும் புனித இரவைத் தேடுவதற்கு கடினமாக முயற்சிக்குமாறு நமது குடும்பத்தார்களை நாம் ஆர்வப்படுத்த வேண்டும். அல்லாஹ்வின் அடியார்களில் எவர், அப்புனிதமிக்க இரவில் அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதில் வெற்றி பெறுகிறாரோ அவர் இன்ஷாஅல்லாஹ், ”ரஹ்மத்” (அருள்கள்) மற்றும் பாவமன்னிப்புகள் வழங்கப்படுவார்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

நமது பிள்ளைகளில் சிலர், இன்னும் சிறிய வயதுடையவர்களாகவும் நோன்பு நோற்கும் ஆற்றல் இல்லாதவர்களாகவும் இருக்கலாம். எனினும், இஸ்லாத்தில் காணப்படும் இஹ்சானின் சிந்தனைகளையும், உண்மை பேசுதல், நேர்மை, நற்காரியங்களைச் செய்தல் போன்றவற்றையும் நமது பிள்ளைகளுக்குப் போதிப்பது அவசியமாகும். இது போன்ற சிறந்த மதிப்பீடுகளை, நமது பிள்ளைகள் இளம் வயதில் இருக்கும் போதே அவர்களிடம் ஏற்படுத்துவது அவசியமாகும். அவற்றை அவர்களின் அன்றாடச் செயல்பாடுகளில் கொண்டு வர வேண்டும். வீட்டு வேலைகளில் தமது தாயாருக்கு உதவுதல், நோன்பு திறந்த பின்பு அதற்காகப் பயன்படுத்திய பாத்திரங்களைக் கழுவுதல் போன்ற நற்காரியங்களைச் செய்யுமாறு அவர்களைத் தூண்ட வேண்டும். இஹ்சானுடைய செயல்களைத் தகப்பனார்கள் செய்வதைக் காணும் நமது பிள்ளைகளிடம் நல்ல உணர்வுகள் ஏற்படும்; தகப்பனார் வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களுக்கு உதவும் போது, தராவீஹ் தொழுகை முடிந்ததும் பள்ளியில் பாய்களைச் சுருட்டி வைத்தல் போன்ற சாதாரண செயலைச் செய்தாலும் அவை பிள்ளைகளிடம் நல்ல தாக்கங்களை ஏற்படுத்தும்.

ஜமாஅத்தார்களே!

நமது வணக்க வழிபாட்டுச் செயல்களில் இஹ்சானின் செயல்பாடுகளை அதிகரித்துக் கொள்ள வேண்டுமென்ற நமது முயற்சிகளோடு, ஏழைகளுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் ”இஹ்சான்” செய்ய வேண்டுமென்ற நோக்கில் நமது செல்வத்திற்கான ஜகாத்தையும் கொடுப்பது நன்றாகும். அதன் மூலம் நமது செல்வத்தைப் பரிசுத்தமாக்கவும் ரமதான் மாதத்தைப் பயன்படுத்தலாம்.

நம்மிடம் காணப்படும் செல்வம் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் நமக்கு வழங்கப்பட்டுள்ள அருள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நம்மிடமுள்ள செல்வம் ஓர் ஆண்டு முழுமையாக நம்மிடம் இருக்குமெனில், அச்செல்வம் ஜகாத்துடைய "நிஸாப்" (ஜகாத் கொடுக்க வேண்டிய அளவுக்கு) இருக்குமெனில் அதிலிருந்து நாம் ஜகாத் கொடுப்பது கடமையாகும். அறிந்து கொள்ளுங்கள்! நமது செல்வத்திற்கான ஜகாத்தைக் கொடுப்பதும் நமது செல்வம் மற்றும் வாழ்வாதாரத்தில் "பரக்கத்" (அபிவிருத்திகள்) ஏற்படுத்துவதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

நம்மையும் நமது செல்வத்தையும் பரிசுத்தமாக்கிக் கொள்வதற்கான அரிய வாய்ப்பாக இந்த ரமதான் மாதத்தை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா ஆக்குவானாக! அதன் மூலம், இம்மையிலும் மறுமையிலும் நமக்கு சாந்தி சமாதானம் ஏற்படட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.